**வரகாபொல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரகாபொல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

கணக்குகளைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை மற்றும் உள்ளபடியான தொகைகளை இணக்கஞ் செய்தல் கூற்று மற்றும் பாதீட்டு தொகைகளின் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2010 ஆம் ஆண்டின் போது சுகாதார நிலையக் கட்டிட நிர்மாணத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 14,081,190 தொகை பொது வைப்புக் கணக்குகள் மூலம் பெறப்பட்டு செலவிடப்பட்ட காரணத்தால் கடன் முதலீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 42,670,273 தொகை செலவில் சுகாதார நிலையக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2013 சனவரி 03 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான சகல காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிலையான சொத்தின் கீழ் கணக்கு வைக்கவேண்டிய போதிலும் 07 மயான நிலங்கள், விளையாட்டு மைதானம் மற்றும் தகனக்கூடம் என்பவற்றின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காக நிலையான வைப்புக்களுக்காக கிடைக்கவேண்டிய வட்டியான ரூபா 45,420 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,716,307 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,071,379 ஆனமையால் வேறுபாடு ரூபா 1,355,072 ஆகும்.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 9,180,476 ஆக இருந்ததுடன், ஒரு வருடகாலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,359,259 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,096,358 ஆகும்.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 11,640,334 தொகையான 05 கணக்கு விடயங்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,425,305 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,323,330 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,898,025 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 7,917 | 6,672 | 1,245 |
| (ii) | வாடகை | 7,555 | 5,329 | 2,226 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,026 | 1,334 | 692 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,387 | 25,903 | 12,516 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் என்பன முறையே ரூபா 1,026,463 மற்றும் ரூபா 9,659,114 ஆக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) 2004 சனவரி முதல் 2011 சனவரி வரையான காலத்திற்குரிய சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 210,430 தொகையான பங்களிப்புப் பணம் செலுத்தாமையினால் ரூபா 105,215 தொகையான மிகைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) சபையின் மூலம் 2006 முதல் 2008 வரையான வருடங்களில் 03 காலாண்டுகளுக்காகச் சேகரிக்கப்பட்ட பெறுமதிசேர் வரியான ரூபா 395,768 தொகை செலுத்தப்படாமையின் காரணமாக ரூபா 249,165 ரொகையான தண்டப் பணத்தைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) சபையால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி உரிய திகதியில் உள்ளவாறு செலுத்தாமையால் வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 29,500 தொகையும் உத்தியோகத்தர்களின் பிரயாணச் செலவினமாக ரூபா 7,056 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2007 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,217,939 தொகையான பொறுப்பு மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,809,427 ஆக இருந்ததுடன் அதில் 01 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 168,299 ஆகும்.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வது தலைவரின் செயற்பொறுப்பாக இருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்